மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.





இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk


# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 39




- கிறிஸ்துவின் சிந்தை
- மோட்சம் போகுதல்?
- பரிணாமம் உண்மையா? - உப்புக் கண்ணீரும் பொது அறிவும்
- உன் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படு (தியானம்)
- பத்து நாட்கள் சென்ற பின்பு

**கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?**

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்தில் வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகள் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.


ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk



**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**
**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**
**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**



**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**


இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறையிலிருந்து தெரிந்தெடுத்து மொழிபெயர்ப்புச் செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# கிறிஸ்துவின் சிந்தை

*"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது"* (பிலிப்பியர் 2:5) என அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு அறிவுரை கூறுகிறார் இன்னொரு இடத்தில், *"எங்களுக்குள்ளே கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது"* (1.கொரிந்தியர் 2:16). என்றுரைக்கிறார்.

நாம் உண்மையாகவே நம் ஆண்டவரைப் போல் சிந்திக்கிறோமா? எபிரேயருக்கு எழுதிய நிருபம், *"நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்"* )எபிரெயர் 12:3) எனக் கூறி கிறிஸ்துவின் சிந்தையை நாம் புரிந்துகொள்ள உதவுகிறது. இயேசுவானவரும்கூட பரிசேயர்களிடம் *"பிதாவுக்குப் பிரியானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன்"* (யோவான் 8:29) என்று கூறினார். தேவனுடைய சித்தமும் நோக்கமும் இயேசுவின் சிந்தனையில் எந்த அளவிற்கு ஆதிக்கம் செலுத்தியது என்றால், அது அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் ஆளுகை செய்தது.

இந்த சிந்தையின் உச்ச நிலையில் அவரது வலுவான ஜெபம் *"பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவ்து"* என இருந்தது (லூக்கா 22:42). எல்லாக் கிரயங்களும் கவனமாக ஜெபத்துடன் நிதானித்துப் பார்க்கப்பட்டது. முன்னே நிற்கும் வேலையிலிருந்து திரும்பிவிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. கெத்செமெனேயில் ஜெபத்திலிருந்து கிறிஸ்து எழுகையில், அவரின் சிந்தையை அதிகமாக யோசித்தவர்களாய், நமக்கு அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டவர்களாய், அவருக்குப் பின்செல்கிறோம்.

**ஆறு விசாரணைகளின் போது**

இயேசு கைதுசெய்யப்பட்டு, ஒரு குற்றவாளியைப்போல் தோட்டத்திலிருந்து ஆறு சரியற்ற விசாரணைகளைச் சந்திக்கும்படியாகக் கொண்டு போகப்பட்டார். முதல் மூன்று விசாரணைகளும் யூதரால் நடத்தப்பட்டன: **1) அன்னாவின்** முன் (யோவான் 18:9-3) **2) காய்பா** முன் (மத்தேயு 26:57) பின்னர் **3) முழு ஆலோசனைச் சங்கம்** முன் (மாற்கு 15:1). இவற்றைத் தொடர்ந்து மூன்று ரோம விசாரணைகள்: **4) பிலாத்துவின்** முன் (லூக்கா 23:1) . **5) ஏரோது** முன் (லூக்கா 23:7) மறுபடியும் **6)**

**பிலாத்து** முன் (லூக்கா 23:13).

*"பொறாமையினாலே அவரை ஒப்புக் கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்திருந்தான்"* (மத்தேயு 17:27) *"மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும்" அவரிடத்தில் பிலாத்து காணவில்லை"* (லூக்கா 23:22). இருப்பினும் அவரை *"வாரினால் அடிக்க ஒப்புக்கொடுத்தான்"* (மாற்கு 15:15) - சதையைக் கிழிக்கக்கூடிய ரோம அடிகள் அவை. பிலாத்துவின் போர்ச்சேவகர்கள் *"சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள் முடியை பின்னி, அவருக்குச் சூட்டி: 'யூதருடைய ராஜாவே வாழ்க' என்று அவரை வாழ்த்தினார்கள்"* (மாற்கு 15:17,18). *"போர்ச்சேவகர்கள் அவரை பரியாசம்பண்ணி, அவரைச் சிரசில் கோலால் அடித்து, அவர் மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரை வணங்கினார்கள்"* (மாற்கு 15:19).



*"அடிக்கப்படும்படி கொண்டு போகப்படும் ஆட்டைப்போல் அவர் இருந்தார்"* என ஏசாயா கூறுகிறார் (ஏசாயா 53:7). கொல்கொதாவில் கரடுமுரடான அழுக்கான ஆணிகள் அவர் கைகளிலும் பாதங்களிலும் செலுத்தப்பட்டன. இயேசுவை மரத்தில் நன்றாகக் கட்டியபின், அதை ஒரு குழிக்குள் நிற்கும்படி இறக்கினர். அவருடைய சீஷர்கள் எல்லாருமே அவரை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். சிலுவை அடியில் நின்ற மக்களும் *"பரியாசம் பண்ணி:, "மற்றவர்களை இரட்சித்தான்; தனைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை. இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும். அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்" என்றார்கள்* (மத்தேயு 27:41-43).

இயேசுவின் மனதிலே என்ன ஓடிக்கொண்டிருந்தது? அவர் கோபப் பட்டாரா? பழிவாங்க வகைதேடினாரா? இந்த நன்றிகெட்ட மாய்மாலக்



காரர்கள்மீது தேவன் 12 லேகியோன் தூதர்களை அனுப்ப வேண்டு மென்று விரும்பினாரா? தமக்கு இப்போது வந்துள்ள துன்பம் அநியாயமானது என்றும், "ஜனங்களுக்காக மரிக்கும்படி" (யோவான் 11:50) வீசி எறியப்படும் குப்பைப்போலக் கருதப்பட்டார் என்றும் அவருக்குத் தெரியும். அதே சமயம், *"தேவன் உலகத்தை இவ்வளவாய் அன்புகூர்ந்த"* படியால்" (யோவான் 3:16). அவர் கீழ்ப்படிந்து பாவமற்ற இரட்சகராகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுக்கிறார் என்பதும் அவருக்குத் தெரியும். ஆகவே அவர் தம்மைப் பிதாவின் சித்தம் செய்யத் தாழ்த்தினார்

*"அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை. நான் வெட்கப்பட்டுப் போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கினேன். என்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார்"* (ஏசாயா 50:6-7)

அவர் தமக்காகத் தாமே பழிவாங்கத் தேடவில்லை. மாறாக, தமக்கு எதிராக வந்த பகையைச் சகித்தார். நியாயத்தீர்ப்புக்கென காலம் வரும். ஆனால் மற்றவர்களுக்காக அநியாயமான உபத்திரவத்திற்கு அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

**சிலுவையில் மொழிந்த வார்த்தைகள்.**

சிலுவையில் தொங்கியவாறு மொழிந்த ஏழு வார்த்தைகள் கிறிஸ்துவின் சிந்தையை மேலும் வெளிப்படுத்துகிறது.

**முதல் மூன்று வார்த்தைகள்**

***"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே"***



(லூக்கா 23:34). இது முதலில் மொழிந்த வார்த்தை. தங்கள் அறியாமையினாலே அவரை மிருகத்தனமாக அடித்து பரிகசித்த போர்ச்சேவகர்களுக்காக அவர் ஜெபிக்கிறார்

என்பது தெளிவாகிறது. தீங்கு நேர்ந்ததினால் நமக்கு ஏற்பட்ட ஒதுக்கப்பட்ட நிலை, மனஅழுத்தம் மற்றும் வேதனை ஒருபுறமிருக்க, அறியாமையினால் நமக்குத் தீங்கு செய்தவர்களைப் பிதா மன்னிக்கும்படியாக நம் மனது கேட்கக் கூடியதாயிருக்கிறதா? *"இயேசு வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்"* (1.பேதுரு 2:23) எனப் பேதுரு அறிவிக்கிறார் பேதுரு நம்மைக் குறித்து அப்படிச் சொல்லக்கூடுமா?

இரண்டாவது வார்த்தை லூக்கா 23:39-43.ல் எழுதப்பட்டுள்ளது.: **"இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்"**. ஒரு குற்றவாளி "இந்த மனிதனை" அறிந்திருந்தான் என்பதைக் கவனியுங்கள். ஏனெனில் அடுத்த குற்றவாளியிடம் இயேசுவைப்பற்றி, *"இவரோ தகாத தொன்றையும் நடப்பிக்கவில்லையே",* என்றான் (லூக்கா 23:41). இயேசுவானவர் கல்லறையை விட்டு வெளியே வருவார் என்றும், ஒருநாள் ராஜரீக வல்லமையோடு திரும்ப வருவார் என்றும் அவன் விசுவாசித்ததை அவனுடைய வேண்டுகோள் குறிப்பாகக் காட்டுகிறது. இயேசு தன்னை "நினைத்தருளுவார்" என நம்பினான் (ஜெபித்தான்). மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பும் எல்லா நபர்களுக்கும் பரதீசில் ஜீவன் உண்டு என்ற நம்பிக்கையை இயேசு தம் பதிலில் அருளுகிறார். ஆண்டவர் கிருபையாக, இரக்கத்தை அருளுவதைக் குறித்த உன் நம்பிக்கையை நீ எப்பொழுது அறிக்கையிட்டாலும், அது தாமதமாகாது. அந்த மனிதன் மரித்து இயேசுவானவர் அடக்கம் பண்ணப்பட்டது போல அவனும் அடக்கம் பண்ணப்பட்டான். அவரோடு அவனும் வாழ்வான்.

**மரிக்கும் நபர்களுக்கு நாம் நித்தியஜீவனைக் குறித்த நம்பிக்கையை அளிக்கிறோமா?**

தனிநபர்களிடம் பேசப்பட்டவை மூன்றாவது வார்த்தையாகும். யோவான் 19:25-27-ல் காணப்படுகிறது. மனதை நெகிழவைக்கும் காட்சியாக இதைக் காண்கிறேன். இயேசுவின் விலையேறபெற்ற பூமிக்கடுத்த பொறுப்பை ஒப்படைப்பதை வசனங்கள் 26 மற்றும் 27-ல் காண்கிறோம். ***"ஸ்திரீயே அதோ, உன் மகன்....அதோ உன் தாய்".*** நம் தாய்மார் பல மணி நேரங்கள் நம்மைப் பாலூட்டி சீராட்டி வளர்த்திருக்கிறார்கள். "சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்தில் வைத்து சிந்தனை பண்ணினவள் (லூக்கா 2:19). தான் அவரை அதிகமாகப் பராமரித்தவள். மரியாள் திட்டமாக வரப்போகும் அவரின் மரணம் அவருடைய தாயின் நல வாழ்வைக் கவனிக்கும் பொறுப்பை அவர் தொடர்ந்து செயல்படுத்த முடியாததாக்கியது. நம் மரண நேரத்தில் இத்தகைய மனது இருக்குமா - பிறரின் நல்வாழ்வைக் குறித்த சிந்தனை?



அவமரியாதையையும் சொல்லொணா வேதனையையும் அனுபவிக்கும் போதும் கூட, இயேசு அறியாமையிலுள்ள மக்களுக்காக மனதுருக்கம் கொண்டவராகவும், மரணத் தறுவாயில் இருப்போருக்கு நம்பிக்கை அளிப்பவராகவும், 'உதவியற்றவர்களுக்கு' (ரோமர் 5:6) அன்பைக் காட்டுகிறவராகவும் இருக்கிறார் என்பது என் இருதயத்தை ஆராயத் தூண்டுகிறது.

**அடுத்த மூன்று வார்த்தைகள்**

மூன்று மணி நேரம் அந்தகாரம் (இருள்) சூழ்ந்தபோது அடுத்த மூன்று வார்த்தைகள் மொழியப்பட்டன. இயேசுவானவர் இருபத்தி இரண்டாம் சங்கீதம் முழுவதையும் சொல்லியிருப்பார் என்று நம்புகிறேன். அவர் குறி எல்லாம் இருளில் இருக்கும் மக்கள் தான்.. தேவன் என்ன எழுதி யிருக்கிறார் என மக்கள் காணவேண்டுமென்பது அவரின விருப்பம் அப்படிக் காணும்போது நம்முடைய நிலையையும் காண வேண்டும்.

மத்தேயு 27:46-ல் நான்காவது வார்த்தையைக் காண்கிறோம். மிகுந்த சத்தமாய், ***'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?'*** என அர்த்தங் கொள்ளும் ***"ஏலி, ஏலி, லாமா சபக்தானி?"*** எனக் கூப்பிட்டார். சங்கீதம் 22-ன் முதலாம் வசனத்தை மேற்கோள் காட்டினார். அவருடைய பிதா "ஆம்" என்றால், பாவமற்ற தேவ ஆட்டுக்குட்டி மட்டுமே தேவையானதைச் செய்யமுடியும் - உலகத்தின் பாவங்களுக்காக மரிக்கவேண்டும் என்பதே அந்த தேவை. "இல்லை" என்றால் இயேசுவின் கதறல் தேவனுடைய "செவிகளில் ஏறிற்று". பிதாவாகிய தேவன் எவ்விதம் கோபமாக இருந்தார் என்ற விவரத்தை அறிய, சங்கீதம் 18:4-15 வரை கவனமாகப் படியுங்கள். தமது மகனின் துன்பத்தையும் இயேசுவின் மூலமாக "மனந்திரும்புங்கள்; பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என அவர் கொடுத்த அன்பான அறைகூவலை அசட்டை செய்த மக்களையும் தேவன் பார்த்துக் கொண்டிருந்தார். இயேசுவானவர் தாம் அழைத்த உடனேயே வரக்கூடிய 12 லேகியோன் தேவ தூதர்கள் தமக்கு இருப்பதை பெரிதும் உணர்ந்திருந்தார். ஆனால் இயேசு அவர்களுடைய நன்மைக்காகவும், உண்மையும் உத்தமுமான விசுவாசிகளின் நன்மைக்காகவும் 'பிடிபட்டார்'.

சங்கீதம் 22-ல் 15-ம் வசனத்தை சீஷன், யோவான் 19:28-உடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார். "என் பெலன் ஓட்டைப்போல காய்ந்தது; என் நாவு மேல் வாயோடே ஒட்டிக் கொண்டது". இது ***"தாகமாயிருக்கிறேன்"*** என்பதற்குச் சமமான வசனமாக இருப்பதாக யோவான் சுட்டிக காட்டுகிறார். இயேசுவானவரின் உலர்ந்த நிலைமையை



மாற்ற அதாவது தாகத்தைத் தணிக்க காவலர்கள் அவருக்குக் காடியைக் கொடுத்தார்கள். ஆனால் இன்னொரு விதமாகவும் சிந்திக்கலாம். இயேசுவானவர் முன்னொரு முறை "நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடை வார்கள்" (மத்தேயு 5:6) என்று கூறினார். தம்முடைய நீதி நிறைவு பெறவேண்டும் என்றும், அவருடைய சகோதரர்களுக்கு நீதி கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்றும் அவர் தாகமாயிருந்தார். எந்த நீதியினால் நாம் இரட்சிக்கப்படுகிறோமோ. அந்த நீதியின் உச்சகட்டம் சிலுவையின் மரணபரியந்தம் அவர் கீழ்ப்படிந்ததில் அடங்கியிருந்தது.

சங்கீதம் 22-ன் கடைசிவசனம் "அவரே இவைகளைச் செய்தார்" என்றுரைக்கிறது. இதை யோவான் 19:30 ***"முடிந்தது"*** என்று பொருள் கொள்கிறது. இந்த ஆறாவது வார்த்தையில் தேவன் தமகுக் கொடுத்த வேலை நிறைவேற்றப பட்டுத் தீர்ந்தது என இயேசு அறிவிக் கிறார். *"அவர் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்து விட்டார்"* (கலாத்தியர் 5:24). அவர் தம் சீஷர்களிடம், *"திடன்கொள் ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்"*, என்றார். எபிரெயர் 2:14 "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படி ...அப்படியானார்", என்று கூறுகிறது. வெற்றி அவருடையது!

**ஏழாவது வார்த்தை**

எழுதப்பட்ட கடைசி வார்த்தை அவருடைய பிதாவினிடம் பேசப்பட்டது. அது லூக்கா 23:46-ல் காணப்படுகிறது. நம்பிக்கை எனும் முடிவான செயலை இயேசு நம்முன் வைக்கிறார். ***"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்"***, என்ற அவரது வார்த்தைகள் அவரின் உண்மையுள்ள தேவன் மீது அவர் சார்ந்திருந்ததைக் காட்டுகின்றன. மரணத்தைச் சந்திக்கும்போது அவருக்கு பயம் இருக்கவில்லை, மாறாக நீதியாய் நியாயம் செய்பவர் மீது அவருக்கு முழு நம்பிக்கை இருந்தது என்பதையும் இவ்வார்த்தைகள் காட்டுகின்றன. "ஜீவனைக் கொடுக்கவும், அதை மறுபடியும் எடுத்துக்



கொள்ளவும் அவருக்கு அதிகாரம் உண்டு" (யோவான் 10:18). சுயம் இல்லாத, பாவமற்ற தம்மையே தியாகம் செய்யும். நம் இரட்சகரை கல்லறையால் அடக்கி வைத்துக்கொள்ள முடியவில்லை. மரணம் நமக்கு வரும்போது நாமும் கூட சந்தோஷமாய் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, நீதியாய் நியாயம் செய்பவரை நம்பக்கூடிய அத்தகைய சிந்தையை நாம் வளர்த்துக்கொள்வோமா?

**நாம் கிறிஸ்துவைப் போல சிந்திக்கிறோமா?**

வேதவாக்கியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்துவின் சிந்தைக்கு நம் பிரதிகிரியை என்ன? அறியாமையிலுள்ளோருக்காக ஜெபிப்பதும், மரித்துக் கொண்டிருப்பவர்களுக்கு நம்பிக்கையளிப்பதும், உதவியற்றோருக்காக அக்கறை கொள்வதும், வெளிப்படையாகக் கடிந்து கொள்வதற்கு வேத வாக்கியத்தைக் கூறுவதும், இருளிலே தம் வார்த்தையைக் கேட்டு விழிப்புடன் இருப்பவர்களிடம் வேண்டுகோள் விடுப்பதுமே அவரின் மனப் பான்மையாக இருந்தது. வேதனையில் அவருடைய ஜீவன் போகும்போது, நம் ஆண்டவர் மிக உன்னதமான நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்தினார்.

"நம் மத்தியில்" நமக்குக் கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறதா?" எனக்குக் கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறதா? நித்ய காலமாகப் பரதீசை அனுபவிக்க நாம் அவரோடுகூட இருப்போமா? கிறிஸ்துவின் சிந்தையை வளர்த்துக் கொள்வதன்மூலம் இப்பொழுது இதற்கான விடையை உருவாக்குகிறோம்.

***நார்ம் லஃப்***

# மோட்சம் போகுதல்?

அநேக நூற்றாண்டுகளாக அநேக விசுவாசிகள், தாங்கள் மரிக்கும்போது தங்களின் "அழிவில்லாத ஆத்துமாக்கள்" மோட்சத்திற்குப் போகும் என்ற போதனையைக் கேட்டு ஆறுதலடைந்திருக்கிறார்கள். யாருக்குமே அழிவில்லாத ஆத்துமா கிடையாது என வேதம் போதிப்பதை நாம் அறிவோம். ஒரு துளி அழியாமை கூட கிடையாது. யாருமே மரணத்தின் போது மோட்சம் போவது கிடையாது. மனிதனின் எந்த ஒரு பகுதியும் (சரீரம் அல்லது "ஆத்துமா") போவதில்லை.

**மோட்சம் போகுதல் பற்றிய "கொள்கை" எப்படி வந்தது?**

'பாக்கியவான்கள்' என்றழைக்கப்படும் மலைப் பிரசங்கத்தின் ஆரம்ப வசனங்களில் மத்தேயு 5:10.ல் *"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது"* என்று தம் சீஷர்களிடம் கூறினார்:12.ம் வசனத்தில் *"சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்"* என்றார்.



ஒருவர் முன்னே மரணம் வந்து நிற்கும்போது இந்த வார்த்தைகள் சொல்லப்படுமானால் - அல்லது பிரேத அடக்கத்தின்போது இவ்வார்த்தைகள் கூறப்படுமானால் அது மிகுந்த ஆறுதலளிக்கிறது. ஆராதனையை நடத்துபவர் *'பரலோகத்திலுள்ள பலன்'* பற்றிக் கூறுவது வழக்கமான ஒன்று. அடக்கம் பண்ணப்பட்டவரின் "அழிவற்ற ஆத்துமா" ஏற்கனவே மோட்சம் போயாகிவிட்டது என நம்மில் பெரும்பாலோர் நினைத்துக் கொள்ளலாம். 'அவனுடைய ஆத்துமா, அவன் அடக்க ஆராதனையைப் பார்த்துக் கொண்டிருக்கும்! இத்தகைய கருத்துக்களை வேதம் போதிக்கிறதில்லை என அதைக் கேட்கிறவர்கள் மனதில் தோன்றுகிறதே இல்லை.



இன்றைய கிறிஸ்தவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் அவர்களின் "அழியாத ஆத்துமா" மரித்த உடனே நேரே மோட்சத்திற்குப் போய் பிதாவை எப்போதும் ஸ்தோத்தரித்துக் கொண்டிருக்கும் என்பதாக. இருப்பினும் சீஷர்களும் அப்போஸ்தலர்களும் விசுவாசித்தவற்றை வேதத்தை ஆழ்ந்து படித்துத் தெரிந்து கொள்ளலாம். அவை கீழ்க்கண்டவாறு:

1. மரணத்தின்போது உயிர், ஞாபகசக்தி, இவை எல்லாமே இல்லாமற் போகிறது.
2. மனிதன் முதலில் தான் படைக்கப்பட்ட மண்ணுக்குத் திரும்புகிறான்.
3. அவன் பிறப்பின்போது அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஜீவசுவாசம் அதைக் கொடுத்த தேவனிடத்திற்கே திரும்ப சென்று விடுகிறது (பிரசங்கி 12:7).

**மரணத்தில் மனுக்குலத்தின் நிலை தான் என்ன?**

குழந்தை பிறக்கும்போது சுவாசிக்க ஆரம்பிக்கும் நேரத்திற்குமுன்பு, அது இறந்த ஆத்துமா எனவும், ஆனால் தேவன் அதற்கு ஜீவ சுவாசத்தைக் கொடுத்ததும், அது ஜீவாத்துமா ஆகிறது எனவும், யூதர்கள் நம்பினார்கள் (எபிரெய பதம் **நெபேஷ் = சுவாசிக்கும் சிருஷ்டி**. ஆதியாகமம் 2:7). அந்த ஆள் மரிக்கும்போது முந்தி நடந்ததற்கு எதிர்மாறாக நடக்கிறது... அவன் இறந்த ஆத்துமா. பிரசங்கி புத்தகத்தை எழுதியவர் ஞானமாக, *"உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்"* என்கிறார். (பிரசங்கி 9:5)..

இந்தப் போதனை சங்கீதம் 104.ல் உள்ள தாவீதின் வார்த்தைகளால் உறுதிப்படுத்தப்படுகிறது. அதில் தேவன் படைத்த அநேக காரியங்களைக் குறித்துப் பேசுகிறான்: *"நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவை கள் சிருஷ்டிக்கப்படும்"* (வ.30). *"நீர் அவைகளின்* ***சுவாசத்தை*** *வாங்கிக் கொள்ள, அவைகள் மாண்டு மண்ணுக்குத் திரும்பும்* (வ.29).

சங்கீதம் 6:5-ல் தாவீது மரணத்தைக் கல்லறையோடு சேர்த்து பேசுகிறார்:: *"**மரணத்தில்** உம்மை நினைவுகூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்?"* 115:17-ல் *"மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்"* தாவீது "தேவனுடைய இருதயத்திற் கேற்ற மனுஷன்" என்றால், அவனுக்கு மரணத்தைபற்றியும் "மரணத்திற்கு பின்னுள்ள வாழ்வு" பற்றியும் தெரிந்திருக்குமே. ஆம், அவனுக்குத் தெரிந்திருந்தது - மரணத்தைபற்றிய தனது தெளிவான கருத்தை சங்கீதம் 146:4.ல் எழுதுகிறான்: *"அவன் ஆவி பிரியும், அவன்*



*தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்"* இந்த எளியசத்தியங்கள் மனிதன் சாகும்போது மண்ணுக்கு திரும்புகிறான் என தெளிவாகப் பேசுகின்றன. அவன் தேவனைத் துதிக்க மோட்சத்திற்குப் போகிறதில்லை. அப்போஸ்தலனாகிய யோவான் இதை உறுதிப்படுத்து கிறார். *"பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை"* (யோவான் 3:13).

அப்போஸ்தலனாகிய பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் செய்த பிரசங்கத்தில் *"தாவீது மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள் வரைக்கும் நம்மிடத்தில் இருக்கிறது"* (அப்போஸ்தலர் 2:29,34)-தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லை) என மிகத் தெளிவாக அறிவிக்கிறார். தாவீதின் எலும்புகள் இன்னும் கல்லறையில் இருக்கிறதெனவும் அவனுடைய சரீரத்தின் எந்தப் பகுதியும் மோட்சத்திற்குப் போகவில்லை எனவும் பேதுரு கூறுகிறார்.

## மனித சரீரத்தின் எந்தப் பகுதியாவது, மரணத்தின்போது மோட்சம் செல்கிறதா?

மரணத்தின்போது "மோட்சத்திற்குச்" செல்லும் அல்லது பிதாவினிடத்திற்குச் செல்லும் மனிதனின் ஒரே பகுதி **ஜீவசுவாசம்**. அதை அவரே முதலில் நமக்குத் தந்தவர். *"**ஆவி** தன்னைத் தந்த தேவனிடத்திற்குப் போகும்"* (பிரசங்கி 12:7).

**ஆபிரகாம்** மோட்சத்திற்குப் போனதாக வேதம் எதுவும் கூறாமல், ஆதியாகமம் 25:8. *"தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்"* எனக் கூறுகிறது. அவர்கள் எங்கிருந்தார்கள்? அவன் இருந்த அதே இடத்தில் - கல்லறையில்; மோட்சத்தில் அல்ல. **ஈசாக்கு** பற்றியும் ஆதியாகமம் 35:29 அதையே தான் சொல்கிறது. **யாக்கோபைப்** பற்றியும் ஆதியாகமம் 4(:33 சொல்வதும் அதுவே. தாவீதைப் போல எல்லாருமே கல்லறைக்குத் தான் சென்றார்கள்". *"என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து **ஏறப்பண்ணுவீர்**"* (சங்கீதம் 71:20). தாவீது தான் மோட்சத்திற்குப் போகப்போவதாக எண்ணியிருந்தால் கீழே கொண்டுவரும்படி தேவனைக் கேட்டிருப்பான். **'ஏறிவரப்பண்ணு**



**வீர்'** எனக் கேட்டிருக்க மாட்டான்.

தானியேல் தீர்க்கதரிசியும், மரணத்தின்போது மக்கள் மோட்சத்திற்குப் போனார்கள் என்று நம்பவில்லை. மக்கள் கல்லறையில் இருப்பதாக நம்பினான். *"பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்"* (தானியேல் 12:2)

மக்களுக்கு அழிவில்லா ஆத்துமா இருப்பதாக பவுல் அப்போஸ்தலன் போதிக்கவில்லை. எக்காளம் கிறிஸ்துவின் வருகையின்போது தொனிக்கையில் *"அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துகொள்ள வேண்டும்"* என்றார் (1.கொரிந்தியர் 15:53). ஆணோ பெண்ணோ - யாருக்கும் அழியாமை ஒரு *துளிகூட* கிடையாது.

அப்போஸ்தலனாகிய யோவானும் 'இரட்சிக்கப்பட்டவர்கள்' மோட்சத் திற்கு போனார்கள் என நம்பவில்லை. ஏனெனில் அவன் இ0யேசுவின் வார்த்தைகளை எழுதி வைத்துள்ளான். "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன் (யோவான் 6:44). மக்கள் ஏற்கனவே மோட்சத்திலிருந்தால், இயேசு ஏன் அவர்களை எழுப்பப் போவதாகக் கூறவேண்டும்? மோட்சத்தில் அல்ல, கல்லறையில் இருப்பார்கள் என அவர் போதித்திருப்பார்.

கர்த்தராகிய இயேசுவின் இறுதி நம்பிக்கைசெய்திகளில் ஒன்று: *"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியை களின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது"* (வெளிப்படுத் தல் 22:12).ஒருவன் மோட்சத்தில் அழியாமை என் ற பலனை அநுபவிக்கி றானென்றால் இயேசு வின் இரண்டாம்வருகை மற்றும் சரீர உயிர்த்தெ ழுதலினால் என்ன பயன்? எளிதான உண் மை என்னவெனில், மனிதனின் எந்தப் பகுதியுமே மோட்சம் போவ தில்லை.. அவன் கர்த்த ராகியஇயேசு, லாசருவை அழைத்ததுபோல், அவரால் அழைக்கப்படும் வரை கல்லறையில் தூங்குகிறான். லாசரு கல்லறையில் நித்திரையாயிருந்தான், மோட்சத்தில் அல்ல (யோவான் 11:11).



# பரிணாமம் உண்மையா? - உப்புக் கண்ணீரும் பொது அறிவு

விஞ்ஞானிகள் பரிணாமத்தைக் குறித்து எடுத்த தீர்மானங்கள் வெகு காலத்திற்கு முன்பு நடந்த சம்பவங்களை விளக்க முடியாததால் அதை நிரூபிக்க முடியாதவர்களாய் போனார்கள். வேதியியல் இயற்பியல் பரிசோதனைகளை உலகில் முதல் முதலில் (ஜீவன்) துவக்கம் மீண்டும் மீண்டும் செய்தால் முடிவுகள் மற்றும் பூமியில் நிரம்பியுள்ள ஜீவராசிகளின் தோற்றம் ஆகியவற்றில் மாறதவையாயிருக்கின்றன. வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அது நமது காலங்களுக்கெல்லாம் முன்பு நடந்த தனித்தன்மை வாய்ந்த ஒரு சம்பவமாகும். அனைவரும் அறிந்திருக்கிறபடி பரந்த விண்வெளியிலுள்ள வேறெந்த கோளிலும், நாம் குடியிருக்கிற கோளில் இருப்பது போன்று ஜீவ இராசிகள் இல்லை. எனவே பரிணாமம் என்பது வெறுமையாக ஒரு கொள்கையாக, இருக்கிற பொருட்களின் விளைவுகளை விளக்கும் ஒரு முயற்சியாக மட்டும் இருக்கலாம். இது நியாயமானதா என்பதையும், அதன் கூற்று உண்மைகளைத் தாங்கி நிற்கிறதா என்பதையும் நாம் தீர்மானிக்க வேண்டும்.



துரதிருஷ்டவசமாக, பரிணாமக்கொள்கையில் பலவித தவறுகள் காணப் படுகின்றன. அவைகளில் சில, ஒரு சட்டநிபுணர் குற்றவாளிக்காக போராடும்போது வைக்கும் வாதம்-பிரதிவாதம் அவனுடைய மரணத்தீர்ப்புக்கு ஏதுவாக இருந்தால் எவ்வளவு மோசமான நிலையில் இருக்குமோ, அந்த அளவுக்கு மோசமாக ஒரு இனத்திலிருந்து (குரங்கு) இன்னொரு இனத்தை (மனிதன்) வேறுபடுத்தும் உடல் அமைப்புகளின் வளர்ச்சி மற்றும்



தோற்றச்சிறப்பு நடைபெற பல்லாயிரம் ஆண்டுகள் ஆகின்ற எனப் பரிணாமக் கொள்ளையாளர் கூறுவது ஏற்கத்தாக்கதாக இல்லை.

இயேசு ஒரு முறை கூறினபிரகாரம், “அத்தி பழங்களை முட்செடிகளிலும், திராக்ஷைப் பழங்களை காஞ் சொறியிலுமிருந்து பறிக்கிறதில்லை”. எல்லா ஜீவராசிகளும் ஒரு சந்ததி யிலிருந்து மற்றொரு சந்ததிக்கு மாறும்போது மிகக் குறைந்த அளவு மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் பிறப்பிக்கும் ஒவ்வொரு ஜீவராசியும் மற்றொன்றைப் பிறப்பிக்கும்போது அரிய நுணுக் கங்களுடன் செயல்படுகின்றன. தாவரவியல் ஆசிரியர் ஒரு சந்ததிக்கும் மற்றொன்றின் சந்ததிக்கும் உள்ள அடிப்படை வித்தியாசங்களுக்குக் காரணம் அவைகள் கருவுறும்போது நடைபெறும் தவறுகளின் நிமித்தமாக ஏற்படக்கூடும். இதனால் ஏதோ ஒரு நாசவிளைவு ஏற்படுகிறது. அது தற்செயலாக நடைபெறும் இரசாயன மாற்றத்தின் நிமித்தம் தொடரும் விளைவுகளாக இருக்கக்கூடும் என்கிறார் ஆனால் இவைகள் பிரிக்கப்பட்டு, மறுபடி அணு பிரிவின்போது திரும்பவும் சேர்க்கப்படுகிறது. அவ்வாறு நடக்கும் போதுதான் அவைகளின் சந்ததிகளில் தொடர்ச்சியான இரத்தப்போக்கு மாற்றங்கள் ஏற்பட கூடும். இந்த மாற்றங்கள் அங்குமிங்கும் யாரும் முன் குறிக்காத நிலையில் நடைபெறுகின்றன. இப்படி அறியப்பட்ட மாற்றங்கள் அந்தந்த ஜீவராசிகளுக்கு மோசத்தை விளைவிக்கின்றன. மனித இராசிகளில் இப்படிப்பட்ட விளைவுகள் மனிதன் விரும்பாத குருட்டுத் தன்மை தொடர்ச்சியான கசிவுகள், ஊனங்கள் மற்றும் சுவாச கோளாறுகளை ஏற்படுத்துகின்றன. பரிணாமக்கொள்கையினர் இவைகளின் சந்ததியில் அங்குமிங்கும் நிகழும் மாற்றங்களை லாபகரமானதெனவும் ஒரு ஜீவராசி அல்லது தாவரத்தில் சுற்றுப்புற சூழ்நிலையைப் பொறுத்து விளைகிறது என்றும் கூறுகின்றனர். இவ்வாறு இனப்பெருக்கத்தில் தற்செய லான தவறுகள் ஏற்படுவது தவிர்க்கப்படுகிறதால் மனித இனத்தில் நிரந்தர மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புகள் மிகவும் குறைவு. இதினிமித்தம் பரிணாமக் கொள்கையாளர் ஒரு மாற்றத்தைத் தீர்மானிக்க பல்லாயிரம் ஆண்டுகள் தேவையென்று கருதுகின்றனர். மில்லியன்ஆண்டுகள் வரை தவறாக கணிக்க தேவைப்படுகிறது.

பரிணாமத்திற்கு முக்கியமாக “நீண்ட காலம்” தேவைப்பட்டாலும் அதை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் இல்லையென்றே கூற வேண்டும். இவர்கள் கணக்குப்படி இயற்கையின் கண்டுப்பிடிப்புகளை காணும்போது, நீண்டகால அளவுகோல் பரிணாமக் கொள்கைக்கு ஊறு விளை விப்பதாகவே காணப்படுகிறது. இதற்கு ஆதாரமாக நமது மனிதக் கூறுக ளில் ஒன்றைத் தெரிந்தெடுத்து, அதன்மூலம் தீர்வுகாண முற்படுவோம். இந்த அத்தியாயத்தின் கவனஈர்ப்பானது மனித

ஆரோக்கியத்திற்கும், சுகவாழ்விற்கும் மிகவும் அவசியமானதொன்றாகும். நமது ஜீவனத்திற்கு அத்தியாவசியமான ஒன்றாகவும் செயல்படுகிறது. இதன் மூலம் நீண்ட நாள் மாற்றம் என்ற எல்லாவித கொள்கைகளையும் அது தவிர்ப்பதோடு, சிருஷ்டிப்பு மாத்திரம் போதுமான சரியான விளக்கத்தைத் தருவதைக் காண்போம்.

மனிதனுடைய கண்ணானது மிகச் சிறந்த ஒரு கருவியாகும். மிகவும் விலையுயர்ந்த ஒரு புகைப்படக் கருவியைவிட பலமடங்கு திறமையுடன் செயல்பட்டு தானே-இயங்கி கண்ணில் விழும் ஒளிச்சுடரின் தன்மையைப் பொறுத்து சுருங்கி விரிந்து, காணும் பொருளின் முழு நிறத்தையும் கிரகித்து செயல்படும் தன்மையுள்ளது. எனினும் ஒரு நாளுக்கு குறைந்தது 18 மணிநேரம் வீதம் தொடர்ந்து சுமார் 70 ஆண்டுகள் வேலை செய்தாலும் பார்வை மங்காமல் அது உழைக்கிறதே! ஆனால் இப்போது இப்படிப்பட்ட ஒரு அதிசய கேமரா நமது சரீரத்தில் பொருத்தப்பட்டிருப்பது



இயற்கையில் சிருஷ்டிகர் தந்த வரப்பிரசாதம் என்பது ஒரு பக்கம் இருக்க, அதிலிருந்து வடியும் மனிதனுடைய கண்ணீரைச் சற்று ஆராய்வோம்.

பொதுவாக நம்மில் பலருக்கு நமது கண்ணீரைக் குறித்த சிந்தனை இருப்ப தில்லை. நம் மனது துன்பப்படும் போது கண்ணீர் சொரிந்தால் அது நமக்கு தொந்தரவாக மாறுகிறது. கண்ணீர் சுரப்பிகளிலிருந்து சுரக் கும் இந்தக் கண்ணீரானது உப்பும், கிருமி நாசினியும் கொண்டதாக இருப்பதுடன் அந்த வழுவழுப்பான திராவகம் நமது கண்ணின் திறந்த வெளியிலுள்ள பாகத்திற்கு பாதுகா ப்பையும் சுத்திகரிப்பையும் உண் டாக்கி அதன் மூலம் நமது கண்ணுக்கு மிகச் சிறந்த சேவை செய்கிறது. ஆனால் நாம் அழாமல் இருக்கும்போது நமது கண்ணீருக்கு சம்பவிப்பது என்ன? அவைகள் தொடர்ச்சியாக நமது கீழ் இமைகளின் மூலம் வழிந்து நமது நாசியிலும் கன்னத்திலும் ஓடாமல் இருப்பது ஏன்? இதன்



காரணம், நமது கண்ணின் உட்பாகத் தில் இருக்கிற துவாரங்கள் மூலம் கண்ணீர் வடியும் குழாய் சுமார் ஒரு செ.மீ நீளத்திற்கு இரு சிறு குழாய்களாக மூக்கினுள் வடிகிறது. இந்த துவாரத்தை ஒரு கண்ணாடியின் எதிரிலிருந்து உங்கள் கண்ணிமைகளை விரித்து பார்த்தால் அதன்கீழ் உள் ஓரத்தில் தெரியும்.

இந்தக் கண்ணீர் குழாயானது கண்ணின் கீழ் இமைக்குள் ஒரு பையில் இணைக்கப்பட்டுள்ளது. அந்தப் பையில் சேர்க்கப்படுகிற கண்ணீரானது மண்டை ஓட்டின் மூக்குப் பகுதியில் மேலே காணப்படும் எலும்புகளில் உட்பகுதியில் உள்ள சிறிய துவாரங்களின்மூலம் வெளியேற்றப்படுகிறது. இதினிமித்தம் திருமணத்தின்போது மணமகளும் அவளுடைய பந்துக்க ளும் இந்தக் கண்ணீர் கண்களில் வழிந்தோடி மூக்கினுள் பிரவேசிப்ப தால் கைக்குட்டையைப் பயன்படுத்துகிறார்கள். சிலவேளைகளில் நீங்கள் அழும்போது தும்ம நேரிட்டால் அந்த கண்ணீரின் ருசி உப்பாக இருப்பதை அறிவீர்கள்.

இப்போது இங்கு ஒரு கேள்வி எழும்புகிறது. இந்தக் கண்ணீர் குழாய்கள் எவ்வாறு உருவாயின? இந்தக் கண்ணீர் குழாயின் ஆரம்பம் எப்படி உள்ளது? நமது முன்னோர்களின் கண் இமைளில் பாதிப்பு ஏற்பட்டதி னால் பின் சந்ததியாரில் இந்தக் கண்ணீர் குழாய்வளர ஆரம்பித்ததா? உங்கள் மனதில் நிச்சயமாக தீர்மானிக்க வேண்டியது என்னவெனில், அவ்வப்போது பயன்படுகிற இப்படிப்பட்ட ஒரு குழாய் இருப்பதனால் தத்துவ ரீதியாக பார்க்கும்போது, அது இயற்கை சம்பவத்தால் இல்லாமல் போயிருக்கலாமே? ஒருவேளை சில நூற்றாண்டுகள் கழித்து மனிதனின் கண்ணிமைகளில் அவைகள் உருவாயின என்று வைத்துக் கொள்வோம். இத்துடன் நாம் கற்பனை செய்யவேண்டியது என்னவெனில், மூக்கின் மேல் பாகத்திலுள்ள எலும்புகளினூடே ஒரு துவாரம் ஏற்பட்டாலொழிய அந்தக் கண்ணீரின் குழாய்க்கு தீர்வு ஏற்படாது. இப்படி துவாரமில்லாத ஒரு எலும்போடு இந்தக் கண்ணீர் குழாய் இணைக்கப் படுமானால், அது பாறைகளைத் துளைக்கும் கருவி உடைக்கப்படாத பாறையை மோதி நிற்கும் நிலையைப் போன்று இருக்கும். ஒருவேளை பயனற்ற ஒரு குழாய் ஏற்கனவே இருந்தாலும் அப்படிப்பட்ட துவாரத்தை நோக்கி இந்தக் குழாய் வளர்வது வெறும் சந்தர்ப்பவசமாக கருதப்படும்.

இந்தக் கட்டுரையின் முன்பகுதியில் கூறப்பட்டதுபோல அது ஏதோ ஒரு வளர்ச்சியாக இருந்திருந்தால் அது கீழே உள் நோக்கி வளர எந்தக் காரணமும் இருந்திருக்காது. உண்மையில் நமது கற்பனை குதிரையைப் பறக்கவிட்டு யோசித்தால், டஜன் கணக்கில் நமது கண்மணியின் பல

பகுதியில், வெளி ஓரம், நடுப்பகுதி, உள் ஓரம் நெடுக இப்படிப்பட்ட கண்ணீர் குழாய்கள் இருந்ததாக வைத்துக்கொள்வோம். பல மில்லியன் ஆண்டுகள் சென்றபின்பு இவைகளில் உள் ஓரத்தில் உள்ள ஒரு குழாய் உறுப்படியாக தன்னிச்சையாக வளர்ந்து எலும்பினுள் துளைத்து மூக்கி னூடே சுத்தமான தடையில்லாத வெளியேற்றும் துவாரமாக மாறிவிட்டது என்று சொன்னால் அது ஒப்புக்கொள்ளக்கூடியது ஆகுமா? இப்போது இறுதியாக, இந்தக் கண்ணீர் குழாய் முற்றிலும் பயனுள்ள நோக்கத்திற் காக பயன்படுகிறது. கண்ணிலிருந்து கசியும் நீர் மூக்கு மற்றும் தொண்டை மூலமாக, அவைகள் சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உருவான 'பாலத்தின்கீழ் ஓடும் தண்ணீரைப்போல' முழுமை அடைந்தது எப்படி? இந்தப் பிரகாரம் பல நூற்றாண்டுகளாக நமது மூதாதையர் கண்ணீர் குழாயில்லாமல் கண்ணீர் கண்ணை நிரப்பி பார்வை மங்கி, அவர்களின் கன்னங்களில் இந்த உப்புக்கண்ணீர் வழிந்தோடிக்கொண்டிருந்தால் எவ்வளவு சிரமமாயிருந்திருக்கும். அவருடைய கன்னங்களில் நிரந்தரமாக இந்த உப்பு கண்ணீரினால் வழிந்தோடிக் கொண்டே இருந்திருக்கும். சற்றே சிந்தியுங்கள்.

மேற்கூறிய அனுபவபூர்வமான ஒரு உதாரணத்திற்கு பரிணாமக்கொள்கை யை ஒப்பிடும்போது, அதில் எவ்வளவு மோசமான தவறுகள் உண்டென் பதைச் சுட்டிக் காட்டுகிறது அல்லவா? இதைக் கேட்ட ஒரு குழந்தை இந்தக் கண்ணீர் குழாயின் விளக்கத்தைக் கேட்ட மாத்திரத்தில் சொல்லக்கூடிய ஒரே பதில் "அது புத்திக் கூர்மையுள்ள வடிவமைப்பாளர் அதிசயிக்கத்தக்க தன்மைகள் நிறைந்த கேமராவைப் பொருத்தி, அதிலிருந்து அதன் விழிப்படலங்களைத் தானாகக் கழுவக்கூடிய உள் வடிவமைப்பை உருவாக்கி அது வெளியே வடிந்து ஓடும்படியாக சுத்த மான ஆரோக்கியமான முறையில் நாசி துவாரத்தில் பொருத்தியிருக்கி றார்" என்று சொல்லும் அல்லவா?

மேலும் கவனியுங்கள். நீண்டகாலத்தை இன்னும் நீட்டிப்பதால், தவறு களை வளர்க்க பெரும் வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. நாம் இதுவரை கண்ட கண்ணீர் குழாயின் சிருஷ்டிப்பின் முடிவில் நாசி துவாரம் இல்லா மற் போயிருந்தால் எப்படி இருந்திருக்கும்? அந்த சிருஷ்டி முகத்தில் எப்போதும் தாரை தாரையாக கண்ணீர் வடிக்கும் பரிதாப மனிதனாக தனது உலகத்தின் மத்தியில் வாழ்ந்திருப்பானே! "ஜனத்தில் மிருக குணமுள்ளவர்களே, உணர்வடையுங்கள். மூடரே, எப்போது புத்திமான்க ளாவீர்கள்? காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கின வர் காணாரோ?' (சங்கீதம் 94:8,9). அதற்கு நம்மால் "ஆமென்" என்று சொல்லாமல் இருக்கக் கூடுமோ?



# உன் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படு

## (தியானம்)



**சாம் ஈவிங் என்பவர் ஒரு முறை கூறினார்**: "கடின உழைப்பு மக்களின் குணாதிசயத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. சிலர் பரிந்து கட்டிக் கொண்டு உழைப்பதற்கு முன்வருவார்கள்; சிலர் வேறு பக்கம் திரும்பிக் கொள்வார்கள், வேறு சிலர் உழைப்பு தேவைப் படும் பக்கம் எட்டியும் பார்க்கமாட்டார்கள்"

நாம் வேலை செய்ய வேண்டும் என்றே தேவன் நம்மைப் படை த்தார். ஆதாமும் கூட தோட்டத்தில் வேலை செய்ய வேண்டியிருந் தது. - அதைப் பண்படுத்தவும் காத்துக் கொள்ளவும் வேண்டியதாயிருந் தது. தகுதியான வேலை செய்வதில் உண்மையோடு நாம் ஈடுபடும்போது மன நிறைவு பெறுகிறோம். ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒன்றாக மேயும் காலம் வரப்போகிறது. அந்நாட்களில் ஒரு வேலையைச் செய்து முடித்து அதன் பலனை அனுபவிப்பது ஒரு ஆசீர்வாதம் என தேவன் வாக்கருளியிருக்கிறார். "விருட்சத்தின் நாட்களைப் போல் என் ஜனத்தின் நாட்கள் இருக்கும்" என ஏசாயா கூறுகிறார்.

மனிதன் பாவம் செய்தபோது, வேலை என்பது அவன் களைப்படையும் வரை உழைத்து வந்தால் தான் உயிர்வாழ முடியும்

என்றாயிற்று. *"நீ பூமிக்குத் திரும்பும் மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்"*, என தேவன் அறிவித்தார். *"ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டிருந்தோமே,"* என பவுல் தெசலோனிக்கேயருக்கு அறிவுரை கூறுகிறார். ஆவிக்குரிய வாழ்வில் உயிர்வாழ்வதற்கும்கூட உழைப்பு அவசியம் ***"உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்"*** என்று பவுல் கூறுகிறார்.

நம் கிரியையால் நாம் இரட்சிக்கப்படுகிறதில்லை; அதே சமயம் கிரியைகள் இல்லாமல் நாம் இரட்சிக்கப்படுகிறதில்லை - இது ஒன்றுக்கொன்று முரணாயிருக்கிறது. இரட்சிப்பு தேவனுடைய ஈவு; நாம் செய்யக்கூடிய எதுவும் அதைச் சம்பாதிக்கப் போதுமானதல்ல. ஆனால் அதே சமயம் நாம் நீதியின் கிரியைகளைச் செய்யாவிடில் அவருடைய ஈவாகிய நித்திய ஜீவனைப் பெற முடியாது. சங்கீதக்காரன் *"கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாக பலனளிக்கிறீர்"*.என்று கூறுகிறார். யாக்கோபும், *"வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறியவேண்டுமோ? நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. அப்படியே ஆபிரகாம் விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று. அவன் தேவனுடைய சிநேகிதன் எனப்பட்டான். ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான் என்று நீங்கள் காண்கிறீர்களே,"* என விளக்கிக் கூறுகிறார்.

ஆகவே உழைக்க, வேலை செய்ய முன்வர வேண்டும். வேலையென்றால் வேறு பக்கம் திரும்பிக் கொண்டு சென்றுவிடக் கூடாது. நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் வேலை செய்வதற்கான பயிற்சி நாமே கொடுக்க வேண்டும். சாலொமோனும், *"பிள்ளையானாலும், அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது, அதின் நடக்கையினால் விளங்கும்"*, என உரைக்கிறார். எல்லாவற்றிற்கும், வேலை செய்வதற்கும் கூட நேரமும் இடமும் இருப்பதாகவும் சாலொமோன் கூறுகிறார். இயேசு கூட வேலை செய்ய வேண்டியிருந்தது. ஏனெனில் அவர் *"பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளை செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது,"* எனக் கூறினார்.



பெஞ்சமீன் ஃபிராங்கிளினுக்கு ஆண்டவரின் வார்த்தைகள் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால், **"இன்று என்னப்படும்போது வேலை செய்; ஏனென்றால் நாளைக்கு எந்த அளவுக்கு நீ தடை செய்யப்படுவாய் என உனக்குத் தெரியாது. ஒரு நாள் என்பதை இரண்டு நாளையத் தினங்களுக்கென தள்ளிப் போடாதே"** என்று அவர் கூறினாராம். நம் காலம் ஒரு வரையறைக்குட்பட்டது.

நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுவதற்கு இதுவே ஏற்ற தருணம். ஏனெனில் இயேசுவானவர் உரைத்ததுபோல் **"ஒருவரும் கிரியை செய்யக்கூடாத"** ஒரு காலம் நம் ஒவ்வொருவருக்கும் வருகிறது.

பிழைப்பிற்கென்று நாம் பார்த்த வேலையினின்று ஓய்வு பெறலாம். ஆனால் நாம் உயிரோடிருக்கும் வரை கர்த்தருடைய பணியினின்று நாம் ஒருபோதும் ஓய்வு பெறுவதில்லை. தாவீது, ***"நான் உயிரோடிருக்குமட்டும் என் கர்த்தரைப் பாடுவேன்; நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்,"*** என்றான். நம்மால் இயலும் வரை, எழுந்து செயல்படுவோம். *பயத்துடனும் நடுக்கத்துடனும் நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுவோம்.* வயதாக, ஆக நாம் செய்யக்கூடிய வேலை மாறலாம். ஆனால் நாம் உயிரோடிருக்கும் வரை, நாம் இருக்கும் இடத்தில் நமக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்வோம். இன்று செய்யக் கூடியதை அடுத்த நாளைக்குத் தள்ளிப் போடாதே என்ற பென் ஃபிராங்க்ளினின் ஞானமுள்ள கூற்றை நினைவில் கொள்ளவேண்டும். *"நீ போகிற பாதாளத்தில் செய்கையும், வித்தையும், அறிவும், ஞானமும் இல்லையே,"* என மிகச் சரியாகவே சாலொமோன் ஞானி கூறியுள்ளார்.

\- ***ராபர்ட் ஜே. லாய்ட்***

# பத்து நாட்கள் சென்ற பின்பு



சில சமயங்களில் தேவனிடம் பேசுவதென்பது ஒருவர் மட்டுமே பேசும் உரையாடல் போல் தோன்றும். நாம் பேசுகிறோம், ஜெபிக்கிறோம்; கேட்கிறோம்; ஆனால் நம் காதுக்கு எதுவுமே கேட்பதில்லை. அப்படிப்பட்ட சமயங்களில் நிஜமாகவே ஆண்டவர் நம் ஜெபத்தைக் கேட்கிறாரா என்று நினைக்கத் தோன்றுகிறது. முற்காலத்தில் தேவன் தம் தீர்க்கதரிசிகள் மூலம் நேரடியாகப் பதில் தருவதையும், தங்களுக்குப் பதில் கிடைக்கும் என மக்கள் அறிந்திருந்ததையும் போல ஏன் இப்பொழுதும் இருக்ககூடாது?

எரேமியா இப்படிப்பட்ட ஒரு தீர்க்கதரிசி. அவன் ஜெபித்தபோது, தேவன் பதிலளித்தார். தேவனிடம் பேசுவதென்பது இருவழி உரை யாடல் எனக் காட்டியவன் எரேமியா. ஆகவே மக்கள் எரேமியாவை தங்களுக்காக தேவனிடம் ஜெபிக்கச் சொன்னார்கள். *"உம்முடைய தேவனாகிய கர்த்தர் நாங்கள் நடக்கவேண்டிய வழியையும் செய்யவேண் டிய காரியத்தையும் எங்களுக்குத் தெரியப் பண்ணும்படிக்கு ஜெபம் பண்ணும்,"* என்றார்கள். ஆகவே எரேமியா அதற்கு ஒத்துக்கொண்டு கர்த்தரிடம் ஜெபித்தான். ***"பத்து நாள் சென்ற பின்பு,*** *கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று,"* (எரேமியா 42:7) என்று எழுதப்பட்டுள்ளது. இங்கே கர்த்தர் எரேமியாவுக்கு பதில் தர பத்து நாட்கள் பிடித்தன.

எலியா, தானியேல், பேதுரு போன்றோர் ஜெபித்துக் கொண்டிருக்கும் போதே பதில்கள் வந்தன. ஆனால் சில சமயங்களில் பதில்கள் வர தாமதமாகின்றன. சோர்ந்து போகாமல், நம் சொந்த விருப்பத்தின்படி செய்யாமல், பொறுமை யோடே தேவனுடைய பதிலுக்காக காத்திருப்பதில் உறுதியாயிருப்போமாக. நாம் எப்போதுமே தேவன் நம் ஜெபத்தைக் கேட்கிறார் என்றும், தமக்குப் பிரியமான நேரத்தில் பதில் தருவார் என்றும் நம்பலாம்.